# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,186 — 1960 අගෝස්තු 26 වැනි සිකුරාදා — 26.8.1960

12,186 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 611 |
| விலைக்கட்டளைகள் .. .. .. | 615 |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள் .. | — |
| மானுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டம்

இத்தாற் பொதுமக்களுக்கு அறிவிப்பதாவது கௌரவ காணி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் கீழ்ச் சொல்லப்பட்டவர்களை, 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டத்தின் பிரிவு 59 (1) ன் ஏற்பாடு களின்படியும், அதன்கீழ் அமைக்கப்பட்ட பிரமாணங்களின்படியும் ஸ்தா பிக்கப்பட்ட புனராலோசனைச் சபையில் 15.8.60 தொடக்கம் மேற் கொண்டு ஒருவருட காலத்திற்கு அங்கத்தவர்களாக இருந்து அச் சபைக்கு மேற்படி சட்டத்தின்கீழ் செய்யப்படும் அப்பீல்களை விசாரிக்கவும், தீர்மானிக்கவும் திரும்பவும் நியமித்துள்ளார்.

திரு. ரி. சி. பி. பெர்னன்டோ, தலைவர்.
திரு. சமரநாயக்க செமசிங்கி.

சி. பி. பி. பெரேரா,
நிரந்தரக் காரியதரிசி.

காணி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார அமைச்சு,
கொழும்பு,
1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ந் திகதி.

---

இல. L.D.—B. 59/47.

### 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்க சம்பளச் சபைச் சட்டம் அறிவித்தல்

1941 ம் ஆண்டின் 27 ம் இலக்க சம்பளச் சபைச் சட்டத்தின் 28 ம் பிரிவின் பிரகாரம், மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிற் சம்பளச் சபைக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு இதனகத்தேயுள்ள அட்ட வணையிற் குறிக்கப்பட்டவாறு, அவ்வட்டவணையிற் குறிக்கப்பட்ட (குறித்த சபையின்) தீர்மானங்களை இச்சபை மாற்ற உத்தேசிக்கிறதென 1943 ம் ஆண்டின் 40 ம் இலக்கச் சட்டத்தாலும், 1953 ம் ஆண்டின் 5 ம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தியமைக்கப்பட்ட மேற்கூறிய சட்டத்தின் 26A ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கிறது.

மேற்கூறிய யோசனைக்கு ஆட்சேபனைகள் 1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16 ந் தேதி பகல் 12 மணிவரைக்கும் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் தெரிவிக்கப்படுவ தோடு அவ்விதம் ஆட்சேபித்தற்கான காரணங்களைக் கூறும் ஓர் அறிக்கையைக் கொண்டதாயுமிருத்தல்வேண்டும்.

சா. ப. குமாரசிங்க,
மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிற்
சம்பளச் சபைத் தலைவர்.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 16 ந உ.

#### அட்டவணை

மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிற் சம்பளச் சபையால் ஆக்கப்பட்டு 1947 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 14 ந் தேதி வெளிவந்த 9,667 ம் இலக்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவையும், 1947 ம் ஆண்டு எப்றில் மாதம் 25 ந் தேதி வெளிவந்த 9,693 ம் இலக்க வர்த்தமானியிலும், 1950 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 1 ந் தேதி வெளிவந்த 10,147 ம் இலக்க வர்த்தமானியிலும், 1951 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ந் தேதி வெளிவந்த 10,229 ம் இலக்க விசேட வர்த்தமானியிலும், 1953 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ந் தேதி வெளிவந்த 10,542 ம் இலக்க விசேட வர்த்தமானியிலும், 1955 ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ந் தேதி வெளிவந்த 10,811 ம் இலக்க விசேட வர்த்தமானியிலும், 1958 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 30 ந் தேதி வெளிவந்த 11,509 ம் இலக்க விசேட வர்த்தமானியிலும், 1958 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ந் தேதி வெளிவந்த 11,573 ம் இலக்க வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களிற் குறிக்கப்பட்டவாறு மாற்றப்பட்ட தீர்மானங்கள் மேலும் பின்வருமாறு மாற்றப்படுகின்றன :—

(1) அவ்வட்டவணையின் II ம் பாகத்தில் " தொழிலாளியின் வகுப்பு " என்ற தலைப்பின்கீழ் " ' ஓ ' வகுப்புத் தொழிலாளி " என்ற உபதலைப்பின் கீழுள்ள பாகத்தில், " பிறிதொரு தொழிலைக் கொண்டு நடத்துவதற்காக மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிலைத் துணைத்தொழிலாக உபயோகிக்கும் வேலைகொடுப் போர் வேலையில் அமர்த்தியுள்ள சாமான்கள் சுமப்போரும், மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிலில் வேலைசெய்பவர் களில் முற்போந்த விடயங்களிற் குறிக்கப்படாத மற்றும் தொழிலாளிகளும் " என்னும் சொற்களுக்குப் பதிலாக " மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிலில் வேலைசெய்பவர் களும் முற்போந்த விடயங்களிற் குறிக்கப்பட்ட தொழிலாளி கள் அல்லாத மற்றுந் தொழிலாளிகள் யாவரும் " என்ற சொற்களை இடுதலாலும் ;

(2) அவ்வட்டவணையின் IV ம் பாகத்தில் " வருடாந்த விடுதலை நாட்கள் (25 ம் பிரிவு) " என்ற தலைப்பின்கீழ் அவ்வட்டவணை யின் இறுதியில் பின்வரும் புதிய தீர்மானங்களைச் சேர்த்துக் கொள்ளுதலாலும் :—

" அரசாங்க விடுமுறைகள்

1. (அ) (I) இப்பந்தியினதும் 2 ம், 3 ம் பந்திகளினதும் ஏற்பாடு களுக்கமைய, ஒவ்வொரு முதலாளியும் தம்மிடம் வேலை பார்க்கும் சகல தொழிலாளிகளுக்கும் (135 ம் அத்தியாய மாகிய) விடுமுறைச் சட்டத்தின் கருத்துக்கமைய பின்வரும் அரசாங்க விடுமுறைகளை வேதனத்துடன் விடுமுறைகளாக அனுமதித்தல் வேண்டும் :—

(1) தமிழ்த் தைப்பொங்கல் தினம் ;
(2) சுதந்திர ஞாபகார்த்த தினம் (பெப்ருவரி 4 ந் தேதி) ;

(3) சிங்கள, இந்து புத்தாண்டு தினம் ;
(4) மே தினம் (மே 1 ந் தேதி) ;
(5) சிங்கள விசாக மாதத்தின் பௌர்ணமி தினம் ;
(6) மொகமத் நபிகள் பிறந்த தினம் ;
(7) கிறிஸ்மஸ் தினம்.

(II) இப்பந்தியின் (I) ம் உபபந்தியிற் குறிக்கப்பட்ட அரசாங்க விடுமுறையொன்று தொழிலாளியொருவர் வேலைநிறுத்தத்தில் ஈடுபடும்காலமொன்றில் நிகழுமிடத்து, அவ்வுபபந்தியின் ஏற்பாடுகள் அத்தகைய தொழிலாளிக்குப் பொருந்தா.

(ஆ) முற்போந்த உபபந்தியிற் குறிக்கப்பட்டுள்ள அத்தகைய விடுமுறை ஒவ்வொன்றும் சம்பந்தமாகக் கொடுக்கப்படவேண்டிய வேதனம்—

(I) ஒரு நிரந்தர தொழிலாளி விடயத்தில், விடுமுறை அனுமதிக்கப்பட்ட மாதத்திற்குரிய சம்பளத்திற்குட் படுத்தப்படவேண்டும். மாதத்திற்குரிய சம்பளத்தைக் கணிக்கும் நோக்கத்திற்காக, நாள் என்பது சாதாரண வேலை நாளாகக் கருதப்படவேண்டும் ;

(II) நாட்சம்பளத் தொழிலாளி விடயத்தில், அத்தகைய விடுமுறை நிகழும் மாதத்திலுள்ள ஒரு சாதாரண வேலை நாளுக்குரிய கீழெல்லைச் சம்பள வீதத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

2. ஆயினும், ஒரு முதலாளி பின்வரும் நிபந்தனைகளுக்கமைய, முற்போந்த பந்தியிற் குறிக்கப்பட்ட அரசாங்க விடுமுறையெதினும் நிரந்தரத் தொழிலாளியெவருக்கும் வேலைகொடுக்கலாம் :—

(அ) அத்தகைய அரசாங்க விடுமுறைக்குப்பின் அடுத்துவரும் டிசெம்பர் மாதத்தின் முப்பத்தோராம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ஒரு நாள் தொழிலாளிக்குக் கொடுக்கப்படவேண்டும். அந்நாள் அப்பதில் விடுமுறை கொடுக்கப்படும் மாதத்திற்குரிய சம்பளத்தைக் கணிக்கும் நோக்கத்திற்காக ஒரு சாதாரண வேலை நாளாகக் கருதப்படவேண்டும்.

(ஆ) அத்தகைய நிரந்தரத்தொழிலாளிக்கு அம்மாதத்திற்குரிய சம்பளத்துடன், சாதாரண வேலைநேரத்திற்கு மேற்படாத வேலை சம்பந்தமாகக் கீழெல்லை மாதாந்தர வீதத்தில் 1/25 க்குட்படாத வீதப்படி சம்பளமும், அத்தொழிலாளி விடயத்தில் ஒரு சாதாரண வேலைநாள்கொண்ட கீழெல்லை மணித்தியாலங்களின் தொகைக்கு மேலதிகமான வேலைவிடயத்தில்(கீழெல்லை மாதாந்தர வீதத்தை 200 ஆற் பிரிக்கவரும்) சாதாரண மணித்தியால வீதத்தின் மும்மடங்குக்குக் குறையாத சம்பளமும் கொடுக்கப்படவேண்டும்.

3. ஆயினும், ஒரு முதலாளி, பின்வரும் நிபந்தனைகளுக்கமைய, முதலாம் பந்தியிற் குறிக்கப்பட்ட அத்தகைய அரசாங்க விடுமுறை நாளெதினும் நாட்சம்பளத் தொழிலாளியெவருக்கும் வேலை கொடுக்கலாம்.

(அ) அத்தகைய அரசாங்க விடுமுறைக்குப்பின் அடுத்துவரும் டிசெம்பர் மாதத்தின் முப்பத்தோராம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ஒரு நாள், விடுமுறையாக, பதில் விடுமுறை கொடுக்கப்படும் மாதத்தில் ஒரு சாதாரண வேலைநாளுக்குக் கொடுக்கப்படவேண்டிய கீழெல்லை நாளாந்தரச் சம்பளவீதத்திற்குக் குறையாத வீதப்படியுள்ள வேதனத்துடன் அத்தொழிலாளிக்குக் கொடுக்கப்படவேண்டும்.

(ஆ) அத்தகைய அரசாங்க விடுமுறையெதினும் செய்யும் வேலைக்கு, அத்தொழிலாளிவிடயத்தில் ஒரு சாதாரண வேலைநாள்கொண்ட மணிநேரத்திற் செய்யும் வேலைக்கு, கீழெல்லை நாளாந்தரச் சம்பள வீதத்தின் இருமடங்குக்குக் குறையாத வேதனமும், சாதாரண வேலைநாளுக்கு மேலதிகமாகச் செய்யும் வேலைக்கு (அத்தொழிலாளி விடயத்தில் சாதாரண வேலைநாள்கொண்ட மணித்தியாலங்களின் தொகையைக் கீழெல்லை நாளாந்தர வீதத்தாற் பிரிக்கவரும்) சாதாரண மணித்தியால வீதத்தின் மும்மடங்குக்குக் குறையாத வேதனமும் அத்தொழிலாளிக்குக் கொடுக்கப்படவேண்டும்.".

---

இல. L. D.—B. 64/48.

## 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்க சம்பளச் சபைச் சட்டம்

### அறிவித்தல்

1941 ம் ஆண்டின் 27 ம் இலக்க சம்பளச் சபைச் சட்டத்தின் 28 ம் பிரிவின் பிரகாரம், அச்சடிப்புத் தொழிற் சம்பளச் சபைகளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவாறு, அவ்வட்டவணையிற் குறிக்கப்பட்ட (குறித்த சபையின்) தீர்மானங்களை இச்சபை மாற்ற உத்தேசிக்கிறதென 1943 ம் ஆண்டின் 40 ம் இலக்கச் சட்டத்தாலும், 1953 ம் ஆண்டின் 5 ம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தியமைக்கப்பட்ட மேற்கூறிய சட்டத்தின் 26 A ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கிறது.

மேற்கூறிய யோசனைக்கு ஆட்சேபனைகள் 1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16 ந் தேதி பகல் 12 மணிவரைக்கும் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் தெரிவிக்கப்படுவதோடு அவ்விதம் ஆட்சேபித்தற்கான காரணங்களைக் கூறும் ஓர் அறிக்கையைக் கொண்டதாயுமிருத்தல் வேண்டும்.

சா. ப. குமாரசிங்க,
அச்சடிப்புத் தொழிற் சம்பளச்சபைத் தலைவர்.

கொழும்பு,
1960 ம் ௵ ஆகஸ்ட் ௴ 16 ந உ.

### அட்டவணை

அச்சடிப்புத் தொழிற் சம்பளச் சபையால் ஆக்கப்பட்டு, 1945 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24 ந் தேதி வெளிவந்த 9,497 ம் இலக்க விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவையும், 1947 ம் ஆண்டு மார்ச் மாதம் 28 ந் தேதி வெளிவந்த 9,686 ம் இலக்க வர்த்தமானியிலும்; 1952 ம் ஆண்டு ஜுலை மாதம் 30 ந் தேதி வெளிவந்த 10,429 ம் இலக்க விசேட வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களிற் குறிக்கப்பட்டுள்ளவாறு மாற்றப்பட்டவையுமான தீர்மானங்கள் அவ்வட்டவணையின் இறுதியிற் பின்வரும் புதிய பந்திகளையிட்டு மேலும் மாற்றப்படுகின்றன :—

#### " அரசாங்க விடுமுறைகள்

9. (அ) இப்பந்தியினதும், 10 ம் பந்தியினதும் ஏற்பாடுகளுக்கமைய, ஒவ்வொரு முதலாளியும் தம்மிடம் வேலைபார்க்கும் ஒவ்வொரு தொழிலாளிக்கும், (135 ம் அத்தியாயமாகிய) விடுமுறைச் சட்டத்தின் கருத்துக்கமைய பின்வரும் அரசாங்க விடுமுறைகள் ஒவ்வொன்றையும் விடுமுறையாக அனுமதித்தல் வேண்டும் :—

(1) தமிழ்த் தைப்பொங்கல் தினம் ;
(2) சுதந்திர ஞாபகார்த்த தினம் (பெப்ருவரி 4 ந் தேதி) ;
(3) சிங்கள, இந்து புத்தாண்டு தினம் ;
(4) மே தினம் (மே மாதம் 1 ந் தேதி) ;
(5) சிங்கள விசாக மாதத்தின் பௌர்ணமி தினம் ;
(6) மொஹமத் நபிகள் பிறந்த தினம் (மீலாத் உன்-நபிஸல்) ;
(7) கிறிஸ்மஸ் தினம்.

(ஆ) இப்பந்தியின் (அ) ம் உபபந்தியிற் குறிக்கப்பட்ட அரசாங்க விடுமுறையொன்று தொழிலாளியொருவர் வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் காலமொன்றில் நிகழுமிடத்து, அவ்வுபபந்தியின் ஏற்பாடுகள் அத்தகைய தொழிலாளிக்குப் பொருந்தா.

(இ) இப்பந்தியின் (அ) ம் உபபந்தியிற் குறிக்கப்பட்ட ஒவ்வொரு விடுமுறைக்கும் ஒரு தொழிலாளிக்குக் கொடுக்கப்படவேண்டிய வேதனம் அத்தகைய விடுமுறைநாள் அனுமதிக்கப்படும் மாதத்திற்குரிய சம்பளத்திற்குட்படுத்தப்படவேண்டும். அம்மாதத்திற்குரிய சம்பளத்தைக் கணிக்கும் நோக்கத்திற்காக, அத்தகைய விடுமுறை ஒரு சாதாரண வேலைநாளாகக் கருதப்படவேண்டும்.

10. ஒரு முதலாளி பின்வரும் நிபந்தனைகளுக்கமைய, 9 ம் பந்தியின் (அ) ம் உபபந்தியிற் குறிக்கப்பட்டுள்ள அரசாங்க விடுமுறையெதினும் தொழிலாளியெவருக்கும் வேலைகொடுக்கலாம் :—

(அ) அத்தகைய அரசாங்க விடுமுறைக்குப்பின் அடுத்துவரும் டிசெம்பர் மாதத்தின் முப்பத்தோராம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ஒரு நாள் அத்தொழிலாளிக்கு விடுமுறையாகக் கொடுக்கப்படவேண்டும். அந்நாள், அப்பதில் விடுமுறை கொடுக்கப்படும் மாதத்திற்குரிய சம்பளத்தைக் கணிக்கும் நோக்கத்திற்காக ஒரு சாதாரண வேலைநாளாகக் கருதப்படவேண்டும்.

(ஆ) அத்தொழிலாளிக்கு, அம்மாதத்திற்குரிய சம்பளத்துடன், ஒரு சாதாரண வேலைநாள்கொண்ட மணித்தியாலங்களிற் செய்யும் வேலைக்கு, கீழெல்லை மாதாந்தர வீதத்தின் 1/30 க்குட்படாத வீதப்படியும், சாதாரண வேலைநாள் கொண்ட மணித்தியாலங்களின் தொகைக்கு மேலதிகமாகச் செய்யும் வேலைக்கு, (கீழெல்லை மாதாந்தர வீதத்தை 240 ஆற் பிரிக்கவரும்) கீழெல்லை மணித்தியால வீதத்தின் மும்மடங்குக்குட்படாத வீதப்படியும் சம்பளம் கொடுக்கப்படவேண்டும்."

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உபபிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள கட்டளைகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டவையென இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கொழும்பு,
1960 ம் ஹு ஆகஸ்ற் மீ 17 ந் உ.

ரி. பி. இலங்கரத்ன,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் போக்குவரத்து அமைச்சர்.

அட்டவணை

| கட்டளையிட்ட திகதி | கட்டளையிடுவதற்கு யாரால் அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்குச்சேர்மதியானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 17.6.60 .. | அம்பாந்தோட்டை மாவட்ட பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | நெல் | .. 24.6.60 ந் திகதியைக் கொண்ட 12,149 ம் இல. |
| 22.6.60 .. | பொலன்னறுவை மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | அரிசி | .. 1.7.60 ந் திகதியைக்கொண்ட 12,153 ம் இலக்கம் |
| 29.6.60 .. | வவுனியா மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | நெல் | .. 8.7.60 ந் திகதியைக் கொண்ட 12,156 ம் இலக்கம் |

---

### இலங்கை பாராளுமன்ற தேர்தல்கள் பேரவைக் கட்டளை, 1946

தேர்தற் றெகுதி இல. 133—றம்புக்கண

இலங்கை (பாராளுமன்ற தேர்தல்கள்) பேரவைக் கட்டளை, 1946 71 (1) ம் பிரிவின் பிரகாரம் மேற்கூறிய தேர்தல் சம்பந்தமான அபேட்சகர் திரு. நுவரபக்ஸ ஹேவயலாகே அசோக்க மாஹனும கருணாரத்ன அவர்களின் தேர்தல் செலவைக்குறித்த அறிக்கையும் மற்றும் அவ்வறிக்கையின் நிமித்தம் சத்தியப் பிரமாணங்களும் 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ம் திகதி எனக்குக் கிடைத்துள்ளன என்றும் அப்பிரமாணங்களையும் அறிக்கையையும் ரூபா ஒன்று (1/-) கட்டியபின் தேர்தற் கந்தோர், கச்சேரி, கேகாலையில் கந்தோர் நேரங்களில் இவ்வறிக்கை அரசினர் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதகாலம்வரை பார்வையிடலாமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யு. ரி. ஜயசிங்க,
தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்,
தேர்தற் றெகுதி இல. 133—றம்புக்கண.

கச்சேரி, கேகாலை,
1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ம் திகதி.

### இலங்கை பாராளுமன்ற தேர்தல்கள் பேரவைக் கட்டளை, 1946

தேர்தற் றெகுதி இல. 133—றம்புக்கண

இலங்கை (பாராளுமன்ற தேர்தல்கள்) பேரவைக் கட்டளை, 1946 71 (1) ம் பிரிவின் பிரகாரம் மேற்கூறிய தேர்தல் சம்பந்தமான அபேட்சகர் திரு. அல்பரட் ஏனஸ்ட் வால்டர் பெலிகொடபிட்டிய அவர்களின் தேர்தல் செலவைக்குறித்த அறிக்கையும் மற்றும் அவ்வறிக்கையின் நிமித்தம் சத்தியப் பிரமாணங்களும் 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ம் திகதி எனக்குக் கிடைத்துள்ளன என்றும் அப்பிரமாணங்களையும் அறிக்கையையும் ரூபா ஒன்று (1/-) கட்டியபின் தேர்தற் கந்தோர், கச்சேரி, கேகாலையில் கந்தோர் நேரங்களில் இவ்வறிக்கை அரசினர் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதகாலம் வரை பார்வையிடலாமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யு. ரி. ஜயசிங்க,
தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்,
தேர்தற் றெகுதி இல. 133—றம்புக்கண.

கச்சேரி, கேகாலை,
1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ந் திகதி.

---

### 4 A ம் மாதிரிப்பத்திரம்

**1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம்**

**சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்**

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் 1 ம் உட்பிரிவின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாதகாலத்துக்குள், பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து அத்தகைய கட்டளை பிறப்பித்தற்கு மாறாக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத்தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும்பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி, யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் அதிகாரி அல்பிறெட் எட்வின் கோக்களி மொறக்கொட ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடை கூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்படவேண்டும்.

கொழும்பு,
1960 ம் ஹு ஆகஸ்டு மீ 22 ந் உ.

அ. எ. கோக்களி மொறக்கொட,
இந்தியர் பாகிஸ்தானிகளைப் பதிவு செய்யும் அதிகாரி.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ்செய்பவரின் பெயரும் விலாசமும் |
|---|---|---|
| Y 7035/C—26.7.51 | .. | வேலு சொக்கலிங்கம் அல்லது ஆறுமுகம், மே.ம. சிறைச்சாலை, வதுளை |
| D 91—1.1.51 | .. | பழனி தங்கவேல், சாலாவைத் தோட்டம், அன்வெலே |
| G 1618—26.7.51 | .. | இராமன் இலெச்சுமணன் வீரன் அல்லது தம்பையா, " றெக்ஃகவுஸ் ", 23-A, கிறெக்கொறி வீதி, கண்டி |
| K 1222—3.1.51 | .. | கதிரவேலு தங்கவேலு, 22, சர்க்குலர் வீதி, அற்றன் |
| CC 4583—29.7.51 | .. | வீரப்பன் சிலம்பரம், வி ஒயாத் தொகுப்பு, பொலாத்தக்கமை, எட்டியாந்தோட்டை |

---

### 4 B ம் மாதிரிப்பத்திரம்

**1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம்**

**சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்**

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் (1) ம், (2) ம் உட்பிரிவுகளின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்குள் பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து அத்தகைய கட்டளை பிறப்பித்தற்கு மாறாக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத்தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும்பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் அதிகாரி அல்பிறெட் எட்வின் கோக்களி மொறக்கொட ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடைகூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்படவேண்டும்.

கொழும்பு,
1960 ம் ஹு ஆகஸ்டு மீ 22 ந் உ.

அ. எ. கோக்களி மொறக்கொட,
இந்தியர் பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் அதிகாரி.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவு செய்யும்பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ் செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| P 8558/C—30.5.51 | .. அரசன் துரைச்சாமி, டெறிக்கிளையர்த் தோட்டம், கொட்டக்கலை | செல்லம்மாள் (மனைவி), குருலிங்கம் (மகன்), பாண்டித்துரை (மகன்) |
| D 1822—5.7.51 | .. மலையன் வீரப்பன் கைம்பெண் பழனியாண்டி சிட்டு, பணுக்குலைத் தோட்டம், தும்மோதரை | இராமலிங்கம் அல்லது ஆறுமுகம் (மகன்), பழனி அல்லது பழனியாண்டி அல்லது பழனிசாமி (மகன்), இரெங்கம்மா (மகள்), வள்ளிநாயகம் (மகள்) |
| D 1840—5.7.51 | .. நாகன் சந்தணம், மாகின்கந்தைப் பிரிவு, சப்புமல்கந்தைத் தொகுப்பு, தெகியோவித்தை | இராசவேல் (மகன்), முருகையா (மகன்), கோவிந்தம்மா (மகள்), வேலுச்சாமி (மகன்), செல்லம்மா (மகள்), வள்ளியம்மா (மகள்) |
| D 2488—5.8.51 | .. சின்னக் கறுப்பன் சின்னையா, வாகாத் தோட்டம், தும்மோதரை | அழகம்மா (மனைவி), செல்வராஜ் (மகன்), முருகேசு (மகன்) |
| D 2779—4.8.51 | .. பொறத்தூர் கிட்ணன் இன்ஞசி இறப்பியல், 40, கொட்டாவை ஃகோல்ற், கொட்டாவை, பன்னிப்பிட்டி | முதலிக்கே அலிஸ் நோனா (மனைவி), தோமஸ் (மகன்), பிருன்சிஸ் (மகன்), யாக்கோப்பு அல்லது யோசேப்பு (மகன்), லூயி (மகன்), போலிஸ் (மகன்), வார்க்கிஸ் (மகன்), அந்தோனிஸ் (மகன்) வெரோனிக்கா (மகள்), இறப்பியல் (மகன்) |
| AA 1599/D—8.7.51 | .. பெருமாள் கிட்ணன், அதர்பீல்ட் தோட்டம், அவிசாவலை .. | வீராச்சாமி (மகன்) |
| G 1016—3.5.51 | .. பஞ்சப்பிள்ளை முத்தையா, 248, அலவத்துக்கொடை, மர்த்தனை வீதி, கண்டி | தையல்நாயகி (மனைவி), வசுந்தரா (மகள்), தனலெச்சுமி (மகள்) |
| H 325—11.7.50 | .. அருணாசலம் ரெட்டியார் இராமசாமி ரெட்டியார், ஜெயலச்சுமி ஸ்ரோஸ், மடுட்கலை | தனலெச்சுமி (மனைவி), இராசலெச்சுமி (மகள்), வசந்தா (மகள்), விசயபாலம் (மகன்), லலிதா (மகள்), பாரதி தேவி (மகள்) |
| I 5367—22.7.51 | .. கடுக்காக்கி சடையப்பன் மகன் வீரப்பன் அல்லது வரதப்பன், கே. வி. முத்துச்சாமி அவர்கள் மேற்பார்த்து, மௌசக்கெலித் தோட்டம், மஸ்கேலியா | வெள்ளையம்மாள் (மனைவி), முத்துச்சாமி (மகன்) |
| KD 401/I—27.6.50 | .. பெரியண்ணபிள்ளை பொறவியா பிள்ளை, 37, கம்பளை வீதி, நாவலப்பிட்டி | காமாச்சியம்மாள் (மனைவி), அமராவதி (மகள்) |
| KD 504/I—28.8.50 | .. சென்னப்பன் கந்தசாமி இலெச்சுமணன் செட்டியார், பிளாக்வாட்டர்த் தோட்டம், இனிக்கத்தேனை | சீரங்கம்மாள் (மனைவி), நாராயணசாமி அல்லது பெருமாள் (மகன்), மாணிக்கம் அல்லது பொன்ராஜு (மகன்), நடராசா (மகன்), இராமையா (மகன்), சந்தானலெச்சுமி (மகள்), இராசேசுவரி (மகள்), சரோஜினி (மகள்) |
| L 1950/I—20.2.51 | .. வேலாயுதன் பாலக்கிருஷ்ணன், 40/6, மகாக்கும்புறை, நாவலப்பிட்டி | பார்வதி (மனைவி), மோகனதாஸ் (மகன்), ஜெயப்பிரகாசம் (மகன்), விஜயன் (மகன்) |
| N 3980—17.2.51 | .. கறுப்பையா இராமசாமி, தெற்குப் பிரிவு, மெதக்கும்புறைத் தொகுப்பு, வட்டக்கொடை | அம்பாயி (மனைவி), சரசுவதி (மகள்), இருளாயி (மகள்) |
| N 4061—17.2.51 | .. நாகன் முருகன், தெற்குப் பிரிவு, மெதக்கும்புறைத் தொகுப்பு, வட்டக்கொடை | பார்வதி (மனைவி), மகேசுவரி அல்லது இராசேசுவரி (மகள்), தம்பிராசு (மகன்), இராசேசுவரி (மகள்) |
| L 5958/N—15.4.51 | .. முத்து செல்லமுத்து, வடக்குப் பிரிவு, எல்பொத்தைத் தோட்டம், கட்டுக்கித்துலை | முருகாயி (மனைவி), பழனியாண்டி (மகன்), செங்கமலை (மகன்), ஆறுமுகம் அல்லது பொன்னமுத்து (மகன்) |
| O 1700—28.1.51 | .. மாரிமுத்து ஆவடை, பிளையர்லோமன்ட் தோட்டம், உடப்புசல்லாவை | காமாச்சி (மனைவி), வீரையா அல்லது வீரமுத்து (மகன்), வீராயி அல்லது காளியம்மா (மகள்), மாரிமுத்து (மகன்), வேலாயி (மகள்) |
| Q 5—28.8.50 | .. துரைச்சாமி எட்வின் வில்லியம்ஸ், கல்லபொத்தைத் தோட்டம், கல்பொடை | அலிஸ் இராசம்மாள் (மனைவி), கிறிஸ்ரதாஸ் ஞானத்துரை (மகன்), டேவிட் யேசுதாஸ் (மகன்), எட்வேட் தேவதாஸ் (மகன்), எல்ன் றூபி குளோறி (மகள்), விக்ரோறியா ஞானசுவுந்தரி (மகள்), என்றி சுவாமிதாஸ் (மகன்) |
| Q 1367—19.2.51 | .. மாரியப்பன் இராசலிங்கம், கல்கந்தேவத்தைத் தோட்டம், தலவாக்கொல்லை | கறுப்பாயி (மனைவி), செட்டி (மகன்), சிலம்பாயி அல்லது சுரம்பாயி (மகள்), நல்லம்மா அல்லது இராமாயி (மகள்) |
| Q 5250—4.5.51 | .. பெரியகறுப்பன் குழந்தைவேல், பாமேர்ஸ்ரன் தோட்டம், தலவாக்கொல்லை | பச்சையம்மா அல்லது செல்லம்மா (மனைவி), ஜெயமணி அல்லது இரெங்கநாயகி (பெருமகள்) |
| Y 4790/W/Y—5.7.51 | .. பெரியதம்பி வீரன், தெற்குப் பிரிவு, றூக்கத்தனைத் தோட்டம், ஆலி-எல | பொட்டு (மனைவி), இலெச்சுமி (மகள்), சிவசம்மா அல்லது இரெங்கம்மா (மகள்) |
| CC 2094—3.7.51 | .. சண்முகம் கைம்பெண் வேலாயுதன் சின்னப்பிள்ளை, எட்டானைத் தோட்டம், வறக்காப்பொலை | முத்தாலு அல்லது இராக்கம்மா (மகள்) |
| CC 2939—16.7.51 | .. முத்தன் முருகன், எதரப்பொலைத் தொகுப்பு, புலத்கொகுப்பிட்டி | பிச்சைக்காரன் (மகன்), பாப்பாத்தி அல்லது பெரியம்மா (மகள்) |
| CC 6711—18.6.51 | .. அந்தோனி வேலு, நாறங்கலைத் தோட்டம், அறநாயக்க .. | செபமாலை (மனைவி), அந்தோனிமுத்து (மகன்), அந்தோனியம்மாள் (மகள்) |

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவு செய்யும்பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ் செய்பவர் சேரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|---|
| DD 3631—11.7.51 | .. | சிலம்பன் சின்னச்சாமி, கீழ்ப் பிரிவு, தெகலேசைத் தொகுப்பு, எட்டியாந்தோட்டை | முத்தம்மா (மனைவி), உண்ணுமலை (மகள்), ஆறுமுகம் அல்லது கறுப்பன் (மகன்), அழகம்மா (மகள்) |
| CC 3810—12.6.51 | .. | முத்தன் இராமையா, கெவிலிப்பிட்டிப் பிரிவு, அம்பதெனியாத் தொகுப்பு, அறநாயக்க | கமலம் (மனைவி), ரேகாஸ்பரம் அல்லது யோகாஸ்பரன் (மகள்), கிருஷ்ணன் (மகன்), கதிராயி (மகள்), நாகம்மா (மகள்) |
| DD 5731—15.6.51 | .. | பழனியாண்டி முத்தையா, மல்வசாவைத் தோட்டம், தெகியோவித்தை | பாப்பாத்தி அல்லது காப்பாத்தி (மனைவி) |

## விலைக் கட்டளைகள்

உணவி விலைக் கட்டளை இல. எம்என்/7—1960.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்—நிராகரிக்கும் கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவோடு 3 (2) ம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு மன்னார் மாவட்டத்தின் உப விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) டொன் ஜோன் பிரான்சிஸ் டக்லஸ் லியனகே ஆகிய யான் இக்கட்டளையால், 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 29 ந் திகதி வெளிவந்த 12,169 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 23.7.60 ந் திகதியிட்டுப் பிரசுரிக்கப்பட்ட எம். என். 6—1960 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ந் திகதி பிற்பகல் 5 மணிக்கு மடுக்கோவிலில் கையொப்பமிடப்பட்டது.

டீ. ஜே. எவ். டீ. லியனகே,
உப விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மன்னார் மாவட்டம்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது